Registerde as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளேடு Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 17 02 - 11 - 1993) செவ்வாய்க்கிழமை ஓலை 257

## கட்சிமாறுபவர் பதவி இழக்காதிருக்க அரசியலமைப்பை திருத்த அரசு முயற்சி

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிமாறினாலும் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக நீடிப்பதற்கு வகைசெய்யும் முகமாக அரசியலமைப்புக்கு திருத்தச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததை தொடர்ந்து அவருக்கு ஆதரவாக மற்றுப்சிலர் ஐ தே. கவில் சேரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதைத் தொடர்ந்து இந்த முயற்சி எடுக்க உத்தேசிக்கப்பட்டதாக தெரியவருகிறது இதேபோன்ற திருத்தச் சட்டமூலம் ஒன்றுக்கான மசோதாவை பாணந்துறை மாவட்ட எம். பியான டாக்டர் நெவில் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல்

(3ஆம் பக்கம் பார்க்க)

# அனாதைச் சிறுவர்கள் என எவருமில்லை!

# இவர்கள் தமிழன்னையின் புதல்வர்கள்!

## காந்தரூபன் அறிவுச்சோலை திறப்பு விழாவில் தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

"இந்தச் சிறுவர்களை நான் அனாதைகளாக, யாருமற்றவர்களாக கருதவில்லை. இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். சிங்கள இனவாத கொடுமையால் இவர்கள் தமது பெற்றோரை, உறவினரை இழந்து நிராதரவாக நிற்கலாம். ஆயினும் இவர்கள் எமது தேசத்தின் தாயாக விளங்கும் தமிழன்னையின் புதல்வர்கள்" இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் நேற்றுக் காலை கோப்பாயில் அமைந்திருக்கும் காந்தரூபன் அறிவுச்சோலையை திறந்துவைத்து உரையாற்றிய பொழுது எடுத்துரைத்தார்.

இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், அறிவுச் சோலையின் சிறார்களும், போதனா ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். தலைவர் தேசியக் கொடியை ஏற்றி வைத்து காந்தரூபன் நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இவ் வைபவத்தில் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

"எல்லோருக்கும் பொது அன்னையான தமிழன்னை இந்தச் சிறுவர்களை தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே இவர்களின் சகோதரர்கள். எமது இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணைபிரியாத அங்கமாக இணைந்துள்ளனர்.

தனிக் குடும்பம், அந்தக் குடும்பத்தைச் சுற்றிய உறவுகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால், ஒரு பரந்த வாழ்வையும், விரிந்த உறவுகளையும் வைத்துக் கொண்டு வளரப் போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாக திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்த சமூக சூழலில் இவர்களிடம் மண்பற்றும், மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றி வளரும். இத்தகைய நற்பண்புகளுடன் இவர்கள் கல்வியறிவு பெற்று இந்தத் தேசத்தின் நிர்மாணிகளாகவும், புத்திஜீவிகளாகவும் உருப்பெற்று எமது மக்களுக்கு பெரும்பணி யாற்றுவார்கள்" என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டார்.



தேசியத் தலைவர் பிரபாகரன் நேற்று கோப்பாயில் நடைபெற்ற காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத் திறப்புவிழாவில் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## டாங்கி பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

புலோப்பளை வாலாற்றுச் சமரில் விடுதலைப் புலிகளி

## வடபகுதி பொருள்கள் மீதான தடை தளர்த்துவது பற்றி யோசனை?

வடபகுதிக்கு எடுத்துச்

வவுனியா அரசசெயலகத்தில்

தெரிவிக்கின்றது.

## இன்று படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் எதிர் வரும் 4-ம், 6-ம் திகதி



லாம். ஆயினும் இவர்கள் எமது தேசத்தின் தாயாக விளங்கும் [illegible] கரன் அவர்கள் நேற்றுக் காலை கோப்பாயில அமைந்திருக்கும் காந்தரூபன் அறிவுச்சோலையை திறந்துவைத்து உரையாற்றிய பொழுது எடுத்துரைத்தார்.

இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும், அறிவுச் சோலையின் சிறார்களும், போதனா ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். தலைவர் தேசியக் கொடியை ஏற்றிவைத்து காந்தரூபன் நினைவுக்கல்லை திரை நீக்கம் செய்து காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இவ் வைபவத்தில் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

''எல்லோருக்கும் பொது அன்னையான தமிழன்னை இந்தச் சிறுவர்களை தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே இவர்களின் சகோதரர்கள். எமது இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணைபிரியாத அங்கமாக இணைந்துள்ளனர்.

தனிக்குடும்பம், அந்தக் குடும்பத்தைச் சுற்றிய உறவுகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால், ஒரு பரந்த வாழ்வையும், விரிந்த உறவுகளையும் வைத்துக் கொண்டு வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாக திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்த சமூக சூழலில் இவர்களிடம் மண்பற்றும், மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றி வளரும். இத்தகைய நற்பண்புகளுடன் இவர்கள் கல்வியறிவு பெற்று இந்தத் தேசத்தின் நிர்மாணிகளாகவும், புத்திஜீவிகளாகவும் உருப்பெற்று எமது மக்களுக்கு பெரும்பணி யாற்றுவார்கள்'' என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்டார்.



தேசியத் [தலைவர் பிரபாகரன் நேற்று கோப்பாயில் நடைபெற்ற காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத் திறப்புவிழாவில் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

## டாங்கி பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

புலோப்பளை வாலாற்றுச் சமரில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றி அழிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவ ''டாங்கி'' மக்களின் பார்வைக்கு முத்திரைச் சந்தைப்பகுதியில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இவ ''டாங்கியை'' ஏராளமான மக்கள் பார்வையிட்டுச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (பா)

# வடபகுதி பொருள்கள் மீதான தடை தளர்த்துவது பற்றி யோசனை ?

வடபகுதிக்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள சில அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்வதற்கு அனுமதிப்பது தொடர்பாக சிறிலங்கா இராணுவ அதிகாரிகளுக்கும் அரசநிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் ஆலோசனை நடைபெற்றுள்ளது.

வவுனியாஅரசசெயலகத்தில் மேற்படி இருதரப்பு அதிகாரிகளுக்குமிடையில் இவ் விடயம் சம்பந்தமாக ஆலோசிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றதாக வவுனியாவிலிருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் வடபகுதிக்கு பொருள்கள் எடுத்துச் செல்வது தொடர்பாக இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

கப்பல் மூலமாகவோ அல்லது தரைமார்க்கமாகவோ வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் சில பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கு வசதியாக கொழும்பில் களஞ்சியம் ஒன்றை அமைப்பது பற்றி இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக இறுதியாக எமக்குக்கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அதேவேளை வடபகுதிக்கு துவிச்சக்கரவண்டி, துணிவகை மற்றும்பாவனைப் பொருள்களை எடுத்துவர அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளதாக நேற்று இலங்கை வானொலி அறிவித்தது.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## இன்று படகுச்சேவை

இளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும் எதிர் வரும் 4-ம், 6-ம் திகதிகளிலும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## புலிகளுடன் பேசுவதற்கு யாழ். செல்ல தயாராம்

### முகமெட் அறிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத்தான் யாழ்ப்பாணம் போகத் தயாராக இருப்பதாகச் சபாநாயகர் எம். எச். முகமெட் தெரிவித்துள்ளார்.

கொழும்புத் தமிழ் தினசரி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் மாத்திரம் தான் பேச விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ. நா. பிரதிநிதிகள் நேற்று விடுவிப்பு

(கொழும்பு)

மடுஅகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் தாபன பிரதிநிதி உட்பட மூன்று பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்ததை தொடர்ந்து இப் பிரதிநிதிகள் விடுதலை செய்யப்பட்டதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் வவுனியா இராணுவ நடவடிக்கையின் போது வெளியேறிய மக்கள் சுமார் 8ஆயிரத்துக்கு மேற்

( 3 ஆம் பக்கம் பார்க்க )



தேசியத்தலைவர் பிரபாகரன் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்ல திறப்பு விழாவில் தேசியக்கொடியினை ஏற்றி வைப்பதனையும் அருகே அறிவுச்சோலை பொறுப்பாளர் ரமேஸையும் படத்தில் காணலாம்.

## தீர்வுத்திட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை

### – டி. பி. விஜேதுங்க தெரிவிப்பு

தமிழர்களுக்கு வழங்கப் போகும் தீர்வுத்திட்டம் எவ்வாறு இருக்கும் என்று பலர் என்னை வினாவுகின்றார்கள். தீர்வுத் திட்டம் என்ற பேச்சிற்கே இடமில்லை. இவ்வாறு ஜனாதிபதி டி. பி.விஜேதுங்க அரச ஊழியர் மத்தியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தலை உரிய காலத்தில் நடத்துவேன். விடுதலைப் புலிகள் கூட இத்தேர்தலில் பங்கு பற்றலாம்.

ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திலும் பாராளுமன்றத் தேர்தல் 95-ம் ஆண்டு மார்ச் மாதத்திலும் நடைபெற இருக்கின்றன என்று தெரிவித்தார்.

### கொழும்பு தமிழர் கடத்தல்

# இரகசிய உளவுப்பிரிவு தமிழ்க்குழுக்கள் தொடர்பு

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் நற்பெயரை சம்பாதித்துக்கொண்டுள்ள சில உயர் அதிகாரிகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட இரகசிய உளவுப் பிரிவே கொழும்பில் தமிழர்களை கைது செய்வதிலும் கடத்திச் செல்வதிலும் ஈடுபட்டுள்ளது என கொழும்பு தமிழ் செய்தி ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் இந்த உளவுப் பிரிவில் தமிழ் குழுக்களிலிருந்து உதிரிகளாக புறப்பட்டு கிழக்கில் இராணுவத்துடன் சேர்ந்து திரிந்த சில முக்கிய பேர்வழிகளும் இருப்பதாகப் பேசப்படுகிறது.

இந்தப் பேர்வழிகளையே இரகசிய கடத்தல்களுக்காக அரசாங்கத்தின் உளவுப் பிரிவு பயன்படுத்துவதாகவும் தெரிய வருகிறது.

சுத்தமான தமிழில் பேசும் ஆயுதபாணிகளும் இக் கடத்தல்கள் அனைத்திலும் ஈடுபட்டிருப்பதாக மனித உரிமை அமைப்புக்களிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் திருக்கோணமலையில் உள்ள ராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு வேண்டிய தமிழர் ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகவும் அதன்பின்னரே அமைச்சர் விழித்துக்கொண்டு இக் கடத்தலை அம்பலத்திற்கு கொண்டுவரும்படி மேலிடத்தைக் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

( 3ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கைதான 6 இளைஞரை காணவில்லை

(லண்டன்)

கொழும்பில் கடந்த மாதம் இலக்க தகடற்ற வாகனங்களில் கடத்திச் செல்லப்பட்ட 6 தமிழ் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதை சிறிலங்கா அரச தலைவர்களுக்கு எழுதிக் கேட்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபை உலகெங்கிலும் உள்ள தனது உறுப்பினர்களை வேண்டியுள்ளது.

கைதான இவர்கள் எங்குள்ளனர் என்பது தெரியவில்லை எனக்கூறும் சர்வதேச மன்னிப்புச்சபை, இவர்களின் கதி குறித்து கவலை தெரிவித்து ஜனாதிபதி டி பி விஜேதுங்கவிற்கு கடிதங்களை அனுப்புமாறு தனது உறுப்பினர்களை கேட்டுள்ளது.

மனித உரிமை விடயத்தில் சிறிலங்கா மோசமாக உள்ளது என்ற வடிவத்தை சரிசெய்ய அரசு முயற்சித்துவரும்வேளையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தவேண்டுகோள் அரசை ஓர் இக் இக்கட்டான

[3 ஆம் பக்கம் பார்க்க]

யுத்தத்தின் சத்தங்கள் கதவடியில்-ஏன்
உட்கார்ந்து இருக்கின்றாய் மதவடியில்
எச்சில் சுமப்பவன் மனிதனல்ல-வந்த
எதிரியை விடுபவன் தமிழனல்ல.

## வரி விளம்பரம்

**"வீட்டுத் தோட்டப் போட்டி"**

ஆரோக்கியமான பயிர்கள் சிறந்த விளைச்சலைத்தரும். பயிர்கள் ஆரோக்கியமாக வளர்ந்து பயன்தரச் "சக்தி" இயற்கைப் பசளை(கூட்டெரு) பயிர்களைப்பூச்சி, புழுக்களிலிருந்து பாதுகாத்து விளைச்சலைப் பெருக்க 'நீமியா உரம்' இரண்டும் கிடைக்கிறது, "லங்கெம்" மின்சாரநிலைய வீதி. "மில்க்வைற்"
(சி-7821)

**வினாத்தாள் (ஆண்டு 3,4)**

07-11-93 ஞாயிறு வெளியிடவிருந்த ஆண்டு 3, ஆண்டு 4, புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் 06-11-93 சனி வெளியிடப்படும் ஏனைய நிறுவனங்களும் பாடசாலைகளும் தனிப்பட்டவர்களும் 06-11-93 சனி பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6460)

**வரலாறும் சமூகக்கல்வியும் O/L**

ஆண்டு 10,11, வரலாறு, சமூகக்கல்வி வினா-விடைகள் மாணவர்கள் தாமாகவே மீட்டல் செய்யவும் விடையளிப்பதற்கு ஆயத்தம் செய்யவும் உதவும். ஆக்கம் நா. மயில்வாகனம். [6461]

**நெற் செய்கை பாதிப்பு**

(குருநகர்)

யாழ்-குடாநாட்டில் காலத்துக்கு முந்திய பெருமழை வீழ்ச்சி காரணமாக காலபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர்.

மேட்டு நிலங்கள் தவிர்ந்த தாழ்வுப் பிரதேசங்களில் இவ்வாறு விதைப் புக்குள்ளான பயிர்கள் வெள்ளத்தால்நாசம் அடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---


❋ அதிவிசேட குளிர்களி ❋ விசேட குளிர்களி ❋ குளிர்பானங்கள்
Extra Special Ice-Cream — Special Ice-Cream — Cool Drinks

❋ பல்சுவை குளிர்களி – Ice cream in Various Flavours & Mix

உடன் தயாரித்து வழங்கப்படும்

❋ புரியாணி வகைகள் ❋ சூப் வகைகள்
சீனமுறை தயாரிப்பு — சாதாரண விலை

சுடச்சுட வழங்கப்படும்

❋ தோசை வகைகள் ❋ றொட்டி வகைகள்

சுவைமிகு சைவ - அசைவ சிற்றுண்டி வகைகள்
உயர்தர பாண் — பாண் சார் தயாரிப்புகள்
உங்கள் வசதிக்கேற்ற விலைகளில் மதியஉணவு

❋ சைவம் ❋ மீன் ❋ இறைச்சி (ஆடு / கோழி)

❋ விசேட தயாரிப்பு கடல் உணவுகள்

**விசேட வைபவங்களிற்கு பரிமாறு சேவை**

சோறு - இடியப்பம் - புரியாணி - சைவ - அசைவ கறி வகைகள்
சிற்றுண்டி - ஐஸ்கிறீம் - தேநீர் - நீங்கள் விரும்பும் உணவு வகைகள்
தேவைக்கேற்ப எமது சேவையாளர்களால் பரிமாறல் சேவை வழங்கப்படும்.

**குதூகலம் உங்களிடம்! வேலைப்பழு எம்மிடம்**

# சுவையருவி

மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு :- சைவ அசைவ உணவு வகைகள் வெவ்வேறு சமையல் அறைகளில் எவ்வித தொடர்புமின்றி தயாராகின்றன.

[சி 7817]


---

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

## 1994-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி 1 ம் திகதி தொடக்கம் 1994ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 1993-11-16 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால்

---

## நினைவு கூருகின்றோம்:..

## 1993- 11- 02

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மணலாறு நெடுங்கேணிப்பகுதியில் வேவு பார்க்கச் சென்ற போது சிறிலங்கா இராணுவம் சுட்டதில் வீரச்சாவெய்திய-

**சீலன்** (செல்லையா பாலகுமாரன் - வெள்ளாம் போக் கட்டி, அல்லாரை - கொடிகாமம்)

1987ஆம் ஆண்டு யாழ் கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மோகன்ராம்** (நாராயணசாமி ஜெயராம் - காட்டுப்புலம் - தொண்டமானாறு)

யாழ் - தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சீலன்** (நவரத்தினம் விஜயகுமார் - சோலையாவளவு, தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

**அலெக்ஸ்** (சிவபாதம் சிவதாஸன் - விளாங்கொடை, அளவெட்டி - யாழ்)

சங்கானையில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 வயதுச்சிறுமி உட்பட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு கிளி - கனகராயன்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் காவலரண் மீதான அதிரடித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். பிலிக்ஸ்** (இரங்கையா கண்ணன் - கிருஷ்ணபுரம் - கிளிநொச்சி)

**மேஜர் காசி** (சுப்பிரமணியம் சிவதாசன் - "நாகவேலகம்" சுன்னாகம் - யாழ்)

காரைநகர் - கோவளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். நந்தன்** (கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன் - ஆலடி - காரைநகர்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதாகி சுட்டுக்கொல்லப்பட்ட-

**காசுா/காசிம்** (நல்லதம்பி சந்திரசேகரம் - 6-ம்ஒழுங்கை, கொட்டடி - யாழ்)

மட்டுநகரில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**வெள்ளையன்**

கனகராயன்குளம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

இதே சம்பவத்தின் பின்னர் வீட்டினுள் போட்டு எரிக்கப்பட்ட இளமருதங் குளத்தைச் சேர்ந்த 02 சகோதரர்கள்.

பண்டத்தரிப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1990ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்

1992ஆம் ஆண்டு ஆனையிறவில் 22. 10. 92 அன்று சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பில் விழுப்புண் அடைந்து யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய-

**லெப். உருத்திரன்** (பரமானந்தன் அனுராஜ் - கம்பர்மலை, அத்தியடி - வல்வெட்டித்துறை)

ஆனையிறவு, கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். இளஞ்செழியன்** (ஏகாம்பரம் திருமேனி - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**2-ம் லெப் இமையவன்** (முத்துக்குமார் யோகேஸ்வரன் - பத்திரகாளி கோயில் வீதி - பருத்தித்துறை)

மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[சி-7818]

---

## ஒன்று கூடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கம இரசாயன விற்பனையாளர்களும்எதிர்வரும் 05-11 93 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி விவசாய திணைக்கழக மண்டபத்தில் ஒன்று கூடுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். தயவு செய்து உரிமையாளர்கள் நேரடியாகப் பங்கு கொள்வது மிகவும் அவசியமாகும்.

செயலாளர்

[6458]

---

## வளநிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும்

**வடமராட்சிக் கோட்டத்தின் பிற்போடப்பட்ட மனைப்பொருளியல் வள நிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும் 1.11.93, 2.11.93 ஆகிய திகதிகளில் யா/வதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறுகிறது என்பதை அறியத்தருகின்றேன்.**

**நன்றி.**

யோ. கந்தசாமி
சே.ப.ஆ. ஆசிரியர்
மனைப்பொருளியல்

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
30-10-93

(சி 7812)

---

**6-ம் ஆண்டு** **1-ம் ஆண்டு**

[illegible] உங்களிடம்! வேலைப்பழு எம்மிடம்

# சுவையருவி

மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு :- சைவ அசைவ உணவு வகைகள் வெவ்வேறு சமையல் அறைகளில் எவ்வித தொடர்புமின்றி தயாராகின்றன.

[சி 7817]

---

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

# 1994-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி தொடக்கம் 1994ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 1993-11-16 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேச சபைச் செயலாளரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன்பேரில் 1993-11-15ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை ''விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி'' என்ற முகவரிக்கும், இணைப் பிரதியை 'பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 1993-11-16ஆம் திகதி காலை 10.00மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1993-11-16ஆம் திகதி காலை 11.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடாத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை

| குத்தகை விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கக் கூடிய கேள்விவைப்பு பணம் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 01. திருநெல்வேலி மத்திய சந்தை | 200/- | 2500/- | 250000.00 |
| 02. திருநெல்வேலிச் சந்தை து. பாதுகாப்பு நிலையம் | 200/- | 500/- | 7000.00 |
| 03. கொக்குவில் ஆடியபாதம் சந்தை | 200/- | 1000/- | 28000.00 |
| 04 திருநெல்வேலிச் சந்தை ஆ. இ. கடை இல-1 | 200/- | 3000/- | 30000.00 |
| 05. திருநெல்வேலிச் சந்தை ஆ. இ. கடை இல-2 | 200/- | 3000/- | 30000.00 |
| 06. நாவலடி அரியாலை மா. இ. கடை | 200/- | 1000/- | 5750.00 |
| 07. ஆடியபாதம்சந்தை ஆ. இ. கடை | 200/- | 3000/- | 17250.00 |
| 08. ஆடியபாதம்சந்தை மா. இ. கடை | 200/- | 3000/- | 20000.00 |
| 09. கொக்குவில் உப-அலுவலக ஆ. இ. கடை | 200/- | 3000/- | 18000 00 |
| 10. கொக்குவில் உப-அலுவலக மா. இ. கடை | 200/- | 3000/- | 30000.00 |
| 11. 327, பலாலிவீதி ஆ. இ. கடை | 200/- | 3000/- | 15000.00 |
| 12. இணுவில் மஞ்சத்தடி மா. இ கடை | 200/- | 3000/- | 20000.00 |
| 13. கோயில்தோட்டம் மா. இ. கடை | 200/- | 2000/- | 5000 00 |
| 14. கோண்டாவில் குமார்வீதி மா. இ. கடை | 200/- | 3000/- | 5000.00 |

நல்லூர் பிரதேச சபை பணிமனை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
26-10-93

சோ. கிருஷ்ணதாசன்
செயலாளர்
விசேட ஆணையாளருக்காக

(சி-7793)

---

மட்டுநகரில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல லப்பட்ட நாட்டுப்பற்றாளரான
**வெள்ளையன்**

கனகராயன்குளம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

இதே சம்பவத்தின் பின்னர் வீட்டினுள் போட்டு எரிக்கப்பட்ட இளமருதங் குளத்தைச் சேர்ந்த 02 சகோதரர்கள்.

பண்டத்தரிப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1990ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்

**லெப். இளஞ்செழியன்** (ஏகாம்பரம் திருமேனி - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**2-ம் லெப் இமையவன்** (முத்துக்குமார் யோகேஸ்வரன் - பத்திரகாளி கோயில் வீதி - பருத்தித்துறை)

மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**


[சி-7818]

---

6-ம் ஆண்டு 1-ம் ஆண்டு


# நினைவு தினம்

ஆண்டவன் படைப்பு:
23 - 11 - 1961



அன்னியன் அழிப்பு
21 - 10 - 1987

தமிழ்த் தாயின் மடியில்
02 - 02 - 1974



தமிழீழத் தாயின் மடியில்
2 - 11 - 1992

### வி முத்துக்குமாரு துரைராஜா

(யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையின் போது உயிர்நீத்தவர்)

அன்னைக்கும் தந்தைக்கும் முதல் மகனானாய்
மறு பிறப்புக்கும் முதல் வழிகாட்டியானாய்
அன்னியன் வந்தான் எங்கள்
தமிழ் மண்ணை அடக்கியாள - அவன்
எண்ணங்கள் மண்ணைக்கவ்வ
சினங்கொண்ட அக்கொடியவன்
தீபங்களை ஏற்றி நிற்கும் தீபாவளியன்று
கடமையினில் கனிந்து நின்ற நின் திருமுகத்தை
நாங்கள் கடைசியிலே காணாமல் கடவுளடி
சேர்ந்தாரோ

### 2-ம் லெப்டினன்ட் இமையவன்

வி.முத்துகுமாரு-யோகேஸ்வரன்

(கறுக்காய் தீவு நேரடி மோதலில் வீரச்சாவு)

தாயினும் நிகரான தமிழீழத் தாயகத்தை மீட்டிட
தலைவனிடம் இமையவன் என்னும் பெயரைப்
பெற்றாய்
பல பல களங்கள் கண்டு மகிழ்ந்தாய்
ஈற்றில் கறுக்காய் தீவினைக் கவர்ந்து நின்ற
கூலியாளனைக்கண்டு கலங்காமல் களிப்புடன்
உன்னித்து
கார்த்திகை மாதத்துக் கடும் மழை நேரத்திலே
காலடி எடுத்து வைத்தாய் கர்ச்சிப்புடன்
நிமிர்ந்து நிலையாய் எதிர்த்தாய்-எதிரி
உடனே நிலைதடுமாறி நிர்க்கதியாய் மடிந்தான்
நிமிடம் மணியாகி மாறிய பின்னே-நீ
தமிழீழ மண்ணில் நிம்மதியாக நித்திரை
கொண்டாய்
அன்பின் மகன்களாகவும் சகோதரங்களாகவும்
மறு பிறப்பில் எங்களுடன் வந்துசேர எல்லாம்
வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

02-11 93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு தின வைபவத்தில் சக போராளிகளையும், உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் வருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பத்திரகாளி கோயில்வீதி,
பருத்தித்துறை.

(6431)

- குடும்பத்தினர்

சிந்தனைக்கு

மனிதர்களை உருவாக்குவது உதவிகள் அல்ல தடைகள் தான், வசதிகளல்ல சிரமங்க தான்.
— வில்லியம் மத்யூஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-11-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 202

த பெ எண் - 05


## நிவாரண வெட்டு ஒரு திட்டமிட்ட சதி

ஸ்ரீலங்கா அரசாங்கம் நீண்ட காலமாக நிவாரணம் வழங்குவதில் கடைப்பிடித்து வரும் பாரபட்சமான நடைமுறையுடன் தற்பொழுது நிவாரணம் வழங்குவதை முழுமையான அரசியல் நோக்கங்களுக்கும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது இதன் அடிப்படையிலேயே மடு, மற்றும் தச்சனா மருதமடு அகதி முகாம்களில் உள்ள ஒரு பகுதி அகதிகளுக்கான நிவாரண உதவிகளை இடைநிறுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் ஒரு ஒழுங்கையோ அன்றி சிரத்தையையோ எப்பொழுதும் காட்டியதில்லை 1990இல் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என மூன்று தரப்பினரும் அகதிகளாக்கப்பட்டபோது சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களும் உடனுக்குடன் ஒழுங்காக நிவாரணம் வழங்கிய சிறிலங்கா அரசாங்கம் தமிழர் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடந்து கொண்டது. சில தமிழ் கிராம மக்களுக்கு வருடங்கள் சில கடந்தும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், தற்பொழுது நிவாரணம் வழங்குவதை தமது அரசின் குறிக்கோள்களை அடைவதற்கு பயன்படுத்த சிங்கள அரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கியுள்ளது. 'மீளக் குடியேற்றல்' என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையானது இராணுவக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள அகதிமுகாம்களில் இருப்பவர்களையும், கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் உள்ளவர்களையும் வடக்கு - கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் குடியேற்றுதல் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் அடிப்படை நோக்கமானது, இப்பகுதியில் சகஜ வாழ்க்கை திரும்பிவிட்டதாகக் கூறிக்கொள்வதற்கும், தமிழர்களும் மீளக்குடியேறிவிட்டர்கள் என்ற போலியான நிலையை உருவாக்கி உள்ளூராட்சித் தேர்தலையும், சர்வசனவாக்கெடுப்பையும் நடத்துவதற்குமான பிரசார யுக்தி ஆகும். இதன் அடிப்படையில், தேர்தல் இடம்பெறும் பட்சத்தில், தமிழர்களும் தேர்தல்களில் கலந்து கொண்டதாக காட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு உண்டாகும் அதே வேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்து விடு

## பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதி முறையை நியாயப்படுத்த நடவடிக்கை

### ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்க்கும் முறையை நியாயப்படுத்தும் நடவடிக்கை மேலும் எடுக்கப்பட இருப்பதாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா கூறியுள்ளார்.

காலி றிச்மண்ட் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் அங்கு உரைநிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது.

பல்வேறு தொழில் துறைகளிலும் பணியாற்றுபவர்களை உருவாக்குவது மட்டும் தான் கல்வியின் நோக்கமல்ல கல்வி அபிவிருத்தியுடன் கலாசார சமய ஆன்மீக துறைகளின் முன்னேற்றத்திற்கும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். தரமான பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நாடு சுபீட்சத்தை நோக்கிய பாதையில் செல்கிறது.

தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்ல பெருந்தொகையான மாணவர்கள் விரும்புகின்றனர் ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து செயற்படுவதன் மூலமே இதனைத் தடுக்க முடியும்

இவ் வைபவத்தில் தென் மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொட ஆளுநர் பாக்கிர் மாக்கர் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

### சூரியனை புதன் கடந்து செல்லு

வானில் வலம் வரும் புதன் கிரகம் எதிர்வரும் சனிக்கிழமையன்று சூரியனைக் கடந்து செல்லும். விண்ணில் நிகழவிருக்கும் இந்த விசித்திரமான அபூர்வ நிகழ்ச்சி சிறிய தொரு புள்ளிவட்டம் சூரியனைக் கடந்து செல்வதுபோல் கண்ணுக்குப் புலனாகும்என்று பம்பாயிலுள்ள நேரு நினைவு கோளகத்தின் இணை இயக்குநர் ஜே ஜே ராவல் கூறியுள்ளார்.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல நோக்கு கூட்டுறவுச் சங்க, தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் 4ம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் (22)

## போதைப்பொருள் கடத்தியவருக்கு 15 வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

ஹெரோயின் கடத்தி வந்த குற்றத்திற்காக தமிழ்ப் பெண்மணி ஒருவருக்கு 15 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சரஸ்வதி பொன்னுத்துரை என்ற பெண்மணி (வயது 40) இந்தியாவிலிருந்து 535 கிராம் ஹெரோயினை கடத்தி வந்தார் என்று கட்டுநாயக்காவிமானநிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒன்பது பிள்ளைகளின் தாயாரான இவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருட சிறைத்தண்டனையை தீர்ப்பாக வழங்கியுள்ளது

## போராட்டத்தில் பிள்ளைகளை இணைப்பது அதிகரிப்பு

தமிழீழ போராட்ட வெற்றி மீட்பிற்காக தங்களது பிள்ளைகளை பெற்றோர் விடுதலைப் போரில் முன்வந்து இணைக்கும் சம்பவங்கள் வடமராட்சியில் மேலும் அதிகரித்து வருகிறது.

இவ்வாரத்தில் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த வ. கருணாநிதி தனது மகன் க. வந்தியத்தேவனையும், இன்பருட்டியைச் சேர்ந்த தேவராசா தனதுமகன் தேவகிருஷ்ணனையும்வடமராட்சி அரசியல் நிர்வாகப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர் (யோ)

### பிரிவுபசாரமும் வரவேற்பும்

(தென்மராட்சி)

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இதுவரை காலமும் 20 ஆண்டுகளுக்கு மேல் அதிபராகவும், ஆசிரியராகவும் கடமை புரிந்து கடந்த 1ம் திகதி தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்ற திரு. த. இராமலிங்கம் அவர்கள் இதுவரை காலமும் செய்த சேவையைப் பாராட்டி பாடசாலை அபிவிருத்திசபை, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிரிவுபசார வைபவம் ஒன்றை நடத்தினர்

வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவர் திரு பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு அதிபர் ஆசிரியர், ஏனையோரும் கலந்து கொண்டு சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர். தற்போதைய அதிபர் திரு. க. பொ செல்லையா அவர்களும் கலந்து கொண்டார். அவருக்கும் வரவேற்பு வைபவமும் இடம் பெற்றது (86)

## இறால் பண்ணை அமைப்பிற்கு உள்ளூர் விவசாயிகள் எதிர்ப்பு

(கொழும்பு)

பிரான்ஸின் உதவியுடன் இறால் பண்ணை அமைக்கப்படுவதற்காக புத்தளம் பகுதியில் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்கள் புல்டோசர்கள் மூலம் அழிக்கப்படுவதற்கு அப்பகுதி விவசாயிகள் பெரும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் விவசாய உபகரணங்களுடன் வீதியில் இறங்கி பெரும் ஆர்ப்பாட்டமொன்றையும் இவ் விவசாயிகள் நடத்தினர்.

இதேவேளை பாலாவிப் பகுதியிலுள்ள குருவிக்குளம், இறால் பண்ணையாளர்களால் மூடப்பட்டுவிட்டதாகவும் விவசாயிகள் புகார் செய்துள்ளனர். மணல் தீவுப் பகுதியிலுள்ள கத்தோலிக்க குருமார்களும் கூட இறால்பண்ணை அமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனராம்.

மேலும் இப்பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடந்தசதுப்பு நிலங்கள் இறால் பண்ணை அமைக்கும் திட்டத்தை தொடர்ந்து தலா 50,000 ரூபா வீதம் ஒவ்வொரு ஏக்கரும் விலை போவதாகவும் தெரியவருகிறது.

### கலைவிழா

சங்கானை ஸ்தான அமிதக பாடசாலையின் 'கலைவிழா' பாடசாலை அதிபர் திருமதி நா. செல்லையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நாளை புதன் கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

வலிமேற்கு கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.பொ வீரபத்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

### ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஒக்ரோபர் மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா கோவிலுக்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது. (22)

## பதவி எதுவும் தருமாறு அநுரா கோரவில்லையாம்

(கொழும்பு)

அநுராபண்டாரநாயக்க நேற்று முன்தினம் ஐ. தே க தலைவரும், ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்கவைச் சந்தித்து ஐந்து ரூபா சந்தாப்பணம் செலுத்தி ஐ.தே.கவுடன் உத்தியோக பூர்வமாக இணைந்தார். ஜனாதிபதியுடன் அநுரா பண்டாரநாயக்க பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்திய போதும், தனக்கு பதவி எதுவும் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை எதையும் விடுக்கவில்லை என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இது இவ்விதமிருக்க அநுரா பாராளுமன்றம் வருவதற்கு வகை செய்யும் விதத்தில் ஐ.தே.க.தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினர் எவரும் தமது பதவியை துறக்க இதுவரை முன்வரவில்லை எனவும் கூறப்படுகிறது.

இராஜினாமா செய்யுமாறு கேட்கப்படக் கூடியவர்களில் ஒருவரென அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படும் ஆயுர்வேத வைத்தியரான டபிள்யூ ஐ. பெர்னாண்டோவிடம் தொடர்பு கொண்டு கேட்கப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யுமாறு என்னை எவருமே கேட்கவில்லை. இது தொடர்பாக எந்தவித உறுதிமொழியையும் எவருக்கும் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்

### ஹென்றிடுனான் நினைவு நாள்

வலிகாமம் வடக்கு பிரிவுக்கான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று செஞ்சிலுவை சங்க ஸ்தாபகர் ஹென்றிடுனான் நினைவு விழா நடைபெறவுள்ளது.

### இரகசிய

கடந்த 14ஆம்திகதி ஜிந்துப்பிட்டியைச் சேர்ந்த பெருமா

பாகுபாடே கிடையாது கர்ப்பிணித் தாய்மார்கள், ஆறு தொடக்கம் எட்டு மாதக் குழந்தையுடன்தாய் என்றெல்

## மன்னம்பிட்டி கிராமத்தில் 3 இளைஞர் மர்மமறைவு

### சடலம் ஒப்படைப்பு

யாழ். கோட்டை அகழியில்

டங்கள் சில கடந்தும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், தற்பொழுது நிவாரணம் வழங்குவதை தமது அரசின் குறிக்கோள்களை அடைவதற்கு பயன்படுத்த சிங்களஅரசாங்கம் திட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கியுள்ளது. 'மீளக் குடியேற்றல்' என்ற ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையானது இராணுவக் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள அகதிமுகாம்களில் இருப்பவர்களையும், கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில் உள்ளவர்களையும் வடக்கு - கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் குடியேற்றுதல் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் அடிப்படை நோக்கமானது, இப்பகுதியில் சகஜ வாழ்க்கை திரும்பிவிட்டதாகக் கூறிக்கொள்வதற்கும், தமிழர்களும் மீளக்குடியேறிவிட்டர்கள் என்ற போலியான நிலையை உருவாக்கி உள்ளூராட்சித் தேர்தலையும், சர்வசனவாக்கெடுப்பையும் நடத்துவதற்குமான பிரசார யுக்தி ஆகும். இதன் அடிப்படையில், தேர்தல் இடம்பெறும் பட்சத்தில், தமிழர்களும் தேர்தல்களில் கலந்து கொண்டதாக காட்டிக் கொள்வதற்கு வாய்ப்பு உண்டாகும் அதே வேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்து விடுவதற்கான அரசின் நோக்கமும் நிறைவேறுவதற்கான வாய்ப்புக்கள் இலகுவாக உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தற்பொழுது வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் இருந்து வெளியேறி மடு, தச்சனா மருதமடு ஆகிய பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களின் நிவாரணத்தை அரசாங்கம் வெட்டியுள்ளது. இராணுவத்தினருக்கு அஞ்சி வெளியேறியுள்ள மக்களை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து குடியேறுமாறும் வற்புறுத்துகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் பௌத்த பேரினவாத சிந்தனையுடையது. இனவாதப் போக்கைக் கடைப்பிடிப்பது தமிழ் தேசிய இனத்தை அழித்து அவர்களின் தாயகத்தைக் கபளிகரம் செய்யும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது இவையெல்லாம். இன்று உலகம் ஏற்றுக்கொண்ட விடயமாகி விட்டன. இந்நிலையில், சிங்களப் பேரினவாத அரசாங்கத்தின் இப்போக்கானது பெரிதும் கண்டனத்திற்கும், ஆட்சேபத்திற்கும் உரியதாயினும், அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயம் போன்ற அமைப்புக்கள், அகதிகள் விடயத்தில் சிங்கள அரசிற்கு அனுசரணையாக செயற்படுவதே ஆச்சரியத்திற்கும் வேதனைக்கும் உரியதொன்றாக உள்ளது.

சிங்கள இராணுவம் இனப்படுகொலை புரிவதில் பெயர் பெற்றது. கடந்த சில வருடங்களில் 30,000க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது. இந்நிலையில், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்குரிய இடங்களைத் தெரிவு செய்வதும், அங்கு வாழ்வதற்கு முற்படுவதும் இயற்கையே. அது அவர்களின் உரிமையும் கூட. இந்நிலையில், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து குடியேறுமாறு வற்புறுத்தும் அரசின் அரசியல் நோக்கம் கொண்ட திட்டத்திற்கு சர்வதேச நிறுவனமான அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் போன்ற அமைப்புக்கள் எவ்வாறு மறைமுகமாகவேனும் உதவி புரிய முடியும். அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அவ் அமைப்புக்கள் எவ்வாறு தம்மால் அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலையில் அவர்களை இடம் பெயருமாறு தூண்டுதல் வழங்க முடியும்.

இந்நிலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள்உயர் ஸ்தானிகராலயம் போன்ற அமைப்புக்கள் சிங்கள பேரினவாத அரசின் நடவடிக்கைக்கு விரும்பியோ விரும்பாமலோ ஒத்துப்போகும் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதேவேளை அகதிகளாகி அல்லல்படும் தமிழ்மக்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களின் பாதுகாப்பான வாழ்க்கைக்கு உதவும்பொருட்டு நிவாரணங்களை தொடர்ந்தும் வழங்குவதற்கு சிறிலங்கா அரசை வற்புறுத்த வேண்டும்.

---

குற்றத்திற்காக தமிழ்ப் பெண்மணி ஒருவருக்கு 15 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சரஸ்வதி பொன்னுத்துரை என்ற பெண்மணி (வயது 40) இந்தியாவிலிரு ... கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒன்பது பிள்ளைகளின் தாயாரான இவருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருட சிறைத்தண்டனையை தீர்ப்பாக வழங்கியுள்ளது

## போராட்டத்தில் பிள்ளைகளை இணைப்பது அதிகரிப்பு

தமிழீழ போராட்ட வெற்றி மீட்பிற்காக தங்களதுபிள்ளைகளை பெற்றோர் விடுதலைப் போரில் முன்வந்து இணைக்கும் சம்பவங்கள் வடமராட்சியில் மேலும் அதிகரித்து வருகிறது.

இவ்வாரத்தில் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த வ. கருணாநிதி தனது மகன் க. வந்தியத்தேவனையும், இன்பருட்டியைச் சேர்ந்த தேவராசா தனதுமகன் தேவகிருஷ்ணனையும்வடமராட்சி அரசியல் நிர்வாகப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர் (யோ)

---

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பிரிவுபசார வைபவம் ஒன்றை நடத்தினர்

வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவர் திரு பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு அதிபர் ஆசிரியர், ஏனையோரும் கலந்து கொண்டு சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர். தற்போதைய அதிபர் திரு. க. பொ செல்லையா அவர்களும் கலந்து கொண்டார். அவருக்கும் வரவேற்பு வைபவமும் இடம் பெற்றது (86)

---

பூர்வமாக இணைந்தார். ஜனாதிபதியுடன் அநுரா பண்டாரநாயக்க பல தரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்திய போதும், தனக்கு பதவி எதுவும் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை எதையும் விடுக்கவில்லை என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இது இவ்விதமிருக்க அநுரா பாராளுமன்றம் வருவதற்கு வகை செய்யும் விதத்தில் ஐ.தே.க.தேசியப்பட்டியலில்பாராளுமன்ற உறுப்பினர் எவரும் தமது பதவியை துறக்க இதுவரை முன்வரவில்லை எனவும் கூறப்படுகிறது.

இராஜினாமா செய்யுமாறு கேட்கப்படக் கூடியவர்களில் ... ராஜினாமா செய்யுமாறு என்னை எவருமே கேட்கவில்லை. இது தொடர்பாக எந்தவித உறுதிமொழியையும் எவருக்கும் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்

### ஹென்றிடுனான் நினைவு நாள்

வலிகாமம் வடக்கு பிரிவுக்கான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று செஞ்சிலுவை சங்க ஸ்தாபகர் ஹென்றிடுனான் நினைவு விழா நடைபெறவுள்ளது.

---

இரகசிய

கடந்த 14ஆம்திகதி ஜிந்துப்பிட்டியைச் சேர்ந்த பெருமா ஜெயக்குமார் என்பவர் காணாமல் போய்விட்டார் எனத் தெரியவருகிறது.

இ.போ.ச. பஸ் வண்டியிலிருந்து தனியார் வாகனங்கள் வரைஇடைமறித்து சோதனை செய்யப்படுகிறது. அவற்றில் தமிழர்கள் இறக்கப்பட்டு வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டு அடையாள அட்டை கேட்கப்படுகின்றனர்.

ஒரு தமிழர் காணாமல் போய் விட்டால் கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சல்லடை போட்டு தேடுதல் நடத்த வேண்டும்

கைதாவோர் மிகவும் சிறிய கூடுகளிலேயே அடைத்து வைக்கப்படுகின்றனர். சில பொலிஸ் நிலையக் கூடுகளில் மலம், சலம் எல்லாம் உள்ளேயே முழங்கால் மடித்துக் கூட இருக்க இடமில்லை போதைவஸ்து குற்றவாளியிலிருந்து கிரிமினல்கள் வரை எல்லாரும் ஒரே இடம் தான்.

கோழிக்கூட்டைத்திறந்தால் என்ன நாற்றமடிக்குமோ அதே நாற்றத்துடன் தான் இச் சிறைக்கூடுகளும் நாற்றமடிக்கும்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள்என்ற பாகுபாடே கிடையாது கர்ப்பிணித் தாய்மார்கள், ஆறு தொடக்கம் எட்டு மாதக் குழந்தையுடன்தாய் என்றெல்லாம் பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

ஆனால் சட்டமோ தடுத்து வைக்கப்பட்டவர்களை கூண்டுக்குள் அடைத்து வைக்க முடியாது என்றும் பெண்களை இரவு வேளைகளில் கைது செய்வதாயின் பெண் பொலிசாருடன் கூடச்சென்றே கைது செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது

ஆனால் இதற்கு மாறாக பெண்கள் தமது இரவு உடைகளுடன் ஜீப் வண்டிகளில் அள்ளி ஏற்றப்படுகின்றனர்.

ஆகவே ஒருவர் கைதாவதற்குரிய தகைமைகளாக அவர் தமிழராக இருந்தாலே போதுமானது.

தனி ஒருவரை அல்லது இருவரை தற்காலிகமாக அடைத்து வைக்கவென உருவாக்கப்பட்ட இக்கூடுகளில் 30 - 40 இளைஞர்கள் அடைக்கப்படுகின்றனர்.

கூடுகளின் கம்பிகளை பிடித்தபடி வெளியே பார்த்துக் கொண்டு நிற்கும் இளைஞர்களிடம் யாழ்ப்பாணத்தமிழில் விசாரணை நடைபெறுகின்றன.

'டேய்... நீ .. எந்தக் காம்?' 'ஆர் உனக்கு ரெய்னிங் தந்தது?', 'ஆளைக் கூட்டி வந்தால் அடையாளம் காட்டுவியா?' 'உனக்கும் தமிழீழம் தேவையோடா' என்பன கேட்கப்படும் கேள்விகளாகும்.

இத் தமிழ்க் குழுக்களுக்கு சிறிலங்காவின் எந்தச் சட்டம் வழிசெய்கின்றது என்று கடவுளுக்குத்தான் வெளிச்சம்என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

ஐ.நா.

பட்டவர்களை மீண்டும் அங்கு குடியேறுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது அவர்கள் மடுவில் வழங்கும் நிவாரணங்களை நிறுத்தியதாகவும் இந்நிலை தோன்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மன்னாரில் மடுவில் இருந்து உணவு பொருள்களை ஏற்றிக் கொண்டு மன்னாரில் இருந்து வடக்கு நோக்கி புறப்பட்ட வாகனங்களை அகதிகள் தாக்கி சேதமாக்கியதாகவும், அதைத் தொடர்ந்து அங்கு சேவை செய்யும் வெளிநாட்டு பிரதிநிதி மிரஸ்டின் றேரோயாவின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

---

வடபகுதி

மேற்படி பொருள்களை கப்பல் மூலமாகவோ, தரைமார்க்கமாகவோ போதிய அளவு தனியார் துறையினர் வடபகுதிக்கு எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## மன்னம்பிட்டி கிராமத்தில் 3 இளைஞர் மர்மமறைவு

மன்னம்பிட்டியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் மூன்று வாலிபர்கள் காணாமல் போயுள்ளனர்.

மயில்வாகனம் கீர்த்திநாதன் (28), ஆறுமுகம் சிவஞானம் (35), செல்வராஜா (37) ஆகிய மூவரும் கடந்த 15ஆம் திகதி மன்னம்பிட்டி குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் மாலை 7-00 மணியளவில் அவ்விடத்திற்கு இராணுவம் சென்று திரும்பியதை அடுத்து அவர்களை அங்கு காணவில்லை. என்று இவர்களின் மனைவியர் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் பல இளைஞர்கள் இவ்விதம் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர் என்றும் இதனால் அப்பகுதியில் மர்மக் கடத்தல் குறித்து அச்சம் எழுந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

கட்சிமாறுபவர்

செய்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை சுதந்திரக் கட்சியை சேர்ந்த அநுராவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் தனியாக ஒரு குழுவாகச் செயற்படுவது பற்றி ஆலோசித்து வருவதாகவும், இது தொடர்பாக விரைவில் பாராளுமன்ற சபாநாயகரை சந்தித்து பேச இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அநுராவுக்கு ஆதரவானஎம்.பிக்கள் சிலர் ஐ.தே.காவில் இணைவதற்கு ஆட்சேபனை தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எம். கே. டி. எஸ். குணவர்த்தனாவும் இவ்வாறு கருத்து தெரிவித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

---

கொழும்பில்

நிலைக்கு உள்ளாக்கும் என பி.பி.ஸி குறிப்பிட்டது.

இந்த ஆறு தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்ட முறையையும் மன்னிப்புச்சபை விபரித்துள்ளது 20 வயதை எட்டாத நான்கு பேரும் இதில் அடங்குவர். இவர்கள் சாதாரண உடையணிந்தவர்களால் கைதானதாகவும் இலக்க தகடற்ற வாகனங்களில் இவர்கள் வந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது

தாம் இப்போது பகிரங்கப்படுத்தியுள்ள ஆறு தமிழ் இளைஞர்களது கைதானது கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படாத கைதுகளில் ஒரு துளியே எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

---

### ஆராதனை

உலக கத்தோலிக்க மக்கள் இன்று இறந்த ஆத்மாக்கள் தினத்தை பக்திசிரத்தையுடன் அனுட்டிப்பர்.

அதனைஒட்டி யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அமைந்துள்ள ஆலயத்தில் மாலை 4.00 மணிக்கு விசேட பூசை, ஆராதனை என்பன நடைபெற இருக்கின்றன.

கல்லறைகள் சுத்திகரிக்கப்பட்டு உறவினர்களால்நினைவு கூர்வதுடன் ஆத்மசாந்தி பெறசிற்றுண்டி வகை தானம் வழங்கும் நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (21)

### செய்முறைப் பரீட்சை

தொலைக்கல்வி பயிலுனர் ஆசிரியர்கட்கான பகுதி 1 செய்முறைப் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச நிலையங்களிலும் இம்மாதம் 6ஆம், 7ஆம்திகதிகளில் நடைபெறும். பரீட்சை சம்பந்தமான முன்னறிவித்தல்களை நாளை புதன்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு சிரேஷ்ட போதனாசிரியர்களைச் சந்தித்து தெரிந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

---

### சடலம் ஒப்படைப்பு

யாழ். கோட்டை அகழியில் இருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம்ஒன்று யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சடலம் நேற்று நள்ளிரவு வரை அடையாளம் காணப்படவில்லை.

### கோட்டக்கல்வி அலுவலகம்

கரவெட்டி வட்டத்திற்கான கோட்டக்கல்வி அலுவலகம் ஒன்று நெல்லியடி இராசகிராம வீதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி வட்டத்திலுள்ள 32 பாடசாலைகள் இக் கோட்டத்தின் கீழ் இயங்கும். இப் பாடசாலைகளினது ஆசிரியர்கள் மாணவர்களது நடைமுறைகள் செயற்பாடுகள் யாவும் இக் கோட்டத்தின் கீழ் செயற்படும்.

இப் புதிய கல்விக் கோட்டத்தின் பிரதிப் பணிப்பாளராக திரு த. சிவராசா நியமிக்கப்பட்டுள்ளார். (யோ)

### தொடர்பு கொள்ளக் கோரிக்கை

1992.06.01 -ம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றவர்கள், பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர் நியமனத்துக்கு விண்ணப்பித்து இதுவரை நியமனம் பெறாத பட்டதாரி ஆசிரியர்களும்க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்கள் சித்தியுடன் 1992/1993 இல் ஆசிரியர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் இதுவரை கணித, விஞ்ஞான. ஆரம்ப ஆசிரியர் நியமனம் கிடைக்காதவர்களும் பின்தங்கிய பகுதிகளில் இருந்து 1993 மார்ச் மாதம் நடாத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காதவர்களும் இன்று யாழ். கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# கோபாலசாமிக்கு எதிராக ஏழுபக்க குற்றப்பத்திரிகை

## கட்சியிலிருந்து நீக்க முஸ்தீபு

(சென்னை)

தி. மு. கவிலிருந்து வை. கோபாலசாமியை ஏன் நீக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை நேற்று தி. மு. க செயலாளர் அன்பழகன் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார் இந்த ஏழு பகக அறிக்கை கட்சியை பிளவுபடுத்துவதாக வை. கோபாலசாமியை குற்றஞ்சாட்டியுள்ளது.

வை கோபாலசாமி விடுதலைப்புலிகளுடன் கொண்டுள்ள தொர்பு போன்ற பல விடயங்கள் நேற்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கட்சியின் தலைமை பொறுப்பை அடுத்ததாக கருணாநிதியின் புதல்வர் மு. க. ஸ்ராலினே ஏற்கலாம் என இதன் மூலம் தெரிவதாக கூறப்படுகிறது வை. கோபாலசாமி புதிய கட்சியை தொடங்குவாரா அவரின் அரசியல் எதிர்காலம் என்ன என்பவையே தற்போது எதிர்பார்க்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## விசாஇன்றி வேலை செய்வோரை ஜப்பான் திருப்பி அனுப்புகிறது

ஜப்பான் நாட்டில் விசா இன்றி தொழில் புரியும் வெளிநாட்டவர்களை அந்நாட்டு அதிகாரிகள் வெளியேற்றி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டில் விசா இன்றி தொழில் புரியும் சிறிலங்கா இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களை வெளியேற்றி வருகிறது. அந்நாட்டு உயர் அதிகாரிகள் அங்குள்ள தொழிலகங்களுக்குச் சென்று விசா இன்றித் தொழில் புரிபவர்களை கண்டறிந்து பலாத்காரமாக வெளியேற்றி வருவதாக மேலும் தெரியவருகிறது.


## 1வது பிறந்தநாள் வாழ்த்து 03-11-93



## செல்வி கஸ்தூரி குகதாஸ்

பளையைச் சேர்ந்த குகதாஸ்—லதா தம்பதிகளின் செல்வப் புதல்வி கஸ்தூரி தனது முதலாவது பிறந்த நாளை 03-11-1993 (நாளை) தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, தாத்தா, அம்மம்மா நோர்வேயில் வசிக்கும் அத்தை, மாமா, மச்சான், மச்சாள், லண்டனில் வசிக்கும் ஆசைச் சித்தப்பா, குட்டிச் சித்தப்பா, பெரிய மாமா, குட்டி மாமா, சித்தி, மாமாமார் மற்றும் உறவினர் நண்பர்கள் ஆகியோர் அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

குகன் ஸ்ரோர்ஸ், புலோப்பளை,
பளை. (6432) பளை.


## வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை 5.15 மணியளவில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.



கப்டன் ஜாகவன்



கபடன் அருண

வீரச்சாவடைந்த கப்டன் ஜாதவன் (சுப்பிரமணியம் இரத்தினகுமார், குச்சவெளி

புலோப்பளை சமரில் வீரச்சாவடைந்த

# 85 மாவீரர்கள் நினைவாக கிளிநொச்சியில் பேரணி

[கிளிநொச்சி]

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த 85 மாவீரர்கள் நினைவாக நேற்று கிளிநொச்சியில் அணிவகுப்பு பேரணி ஒன்று நடத்தப்பட்டது. கரடிப்போக்கு சந்தியிலிருந்து ஆரம்பமான இப் பேரணியில் யாழ்தேவி புகையிரதம்போல் வடிவமைக்கப்பட்ட ஊர்தி ஒன்றும் எடுத்து செல்லப்பட்டது. புகைவண்டி பெட்டிகளில் இராணுவம் மீது விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன கவச வாகனங்கள் எரிவதும் வரையப்பட்டிருந்தன.

புகைவண்டி இயந்திரத்தில் 85 மாவீரர்கள் நினைவு கற்கள் வைக்கப்பட்டு மலர் வளையங்கள் வைக்கப்பட்டிருந்தன. மாவீரர்களின் உருவப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன யாழ்தேவி ஊர்தியின் இரு புறமும் போராளிகளும், துணைப் படை வீரர்களும் அணி வகுத்து வந்தனர். இதன் பின்னால் விடுதலைப் புலிகள் பாண்ட் குழு சென்றது. இதை தொடர்ந்து பாடசாலை சாரணரும், பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் நீண்ட வரிசையில் கொட்டும் மழையிலும் அணி வகுத்துச் சென்றனர்.

பிற்பகல் 2.15 க்கு ஆரம்பமான இப்பேரணி கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய சந்தியை வந்தடைந்தது அங்கு அமைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி சிறப்பு பொறுப்பாளர் லெப். கேணல் நாயகன் மற்றும் மேஜர் துஷ்யந்தன் ஆகியோரது உருவப் படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி மேற்கு வட்ட பொறுப்பாளர் சஞ்சீவி 85 மாவீரர்களுக்கும் தனித் தனியே ஈகைச்சுடர் ஏற்றினார். தொடர்ந்து நகர்ந்த பேரணி அரச செயலகம் முன் சென்றடைந்தது. அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் வன்னி மாவட்ட மகளிர் அமைப்பு துணை பொறுப்பாளர் செல்வி அன்பரசி தலைமையில் வீரவணக்க கூட்டம் நடைபெற்றது.

## தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விஞ்ஞான செயன்முறைத் தேர்வு

தமிழீழப் பொதுக்கல்வித் தோவின் விஞ்ஞான செயன்முறைத்தேர்வு இம்மாதம் 6ஆம 7ஆம திகதிகளில் முன்னரே அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில நடைபெறுமெனவும், தோவாளருக்கான கருத்தரங்கு கல்விகோட்ட ரீதியாக பனவரும் திகதிகளில் நடைபெறுமென தோவு ஆணையாளர் அறிவிததுளளார்.

யாழ்ப்பாணம் வேலணைக் கோட்ட தேர்வாளருக்கு நாளை புதன்கிழமை மு. ப. 9. 00 மணிக்கும், யா/யாழ். இந்துக்கல லூரி குமாரசாமி மணடபத்திலும், மருதனார் மடம், பண்டத்தரிப்பு கோட்ட தேர்வாளருக்கு நாளை புதன்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிக் கல்விக் கோட்ட தேர்வாளர்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை மு. பகல் 9. 00 மணிக்கு யா/மெதடிஸ் பெண்கள் உயர்கல்லூரி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக் கோட்டத் தேர்வாளர்களுக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை பி ப. 2. 00 மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

## எழுதுவிளைஞர் சேவை பதிவு செய்து கொள்ளவும்

(நமதுநிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் மத்திய அரசிற்கு விண்ணப்பத்து பரீட்சையில் தேர்ச்சிபெற்று முன்னர் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

1992இல் நடைபெற்ற பரீட்சையில் கிடைத்த பெறுபேறுகளின்படி இவர்களுக் செய்து கொள்ளுமாறு யாழ் அரசாங்க அதிபர் கேடடுள்ளார்.

6ஆம், 7ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டபடி தகைமைச் சான்றிதழ்களையும் அவற்றின் படபபிரதிகளையும் மற்றும் ஆவணங்களையும் கொண்டுவருமாறும் அரச அதிபர் பணித்துள்ளார். [ச]

## றூப்பந்து


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 15 — 06 — 1972

வீரச்சாவு: 02 — 10 — 1993

### லெப். மதிவாணன் (விபுலன்)

நடராசலிங்கம் கலைச்செல்வன்

(ஆலங்கேணி, மூன்றாம் வட்டாரம், திருகோணமலை)

வேளங்கள் படை நடுங்க ...
வெற்றி வேங்கையாய் வீறு கொண்டு,
பார்புகழ் தமிழன் நிலம் பறிபோக பார்த்திராது
புலோப்பளை போரில் நின்றான், புதியதோர் சரித்திர
மானான்

★ இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது வீரவணக்கங்கள்.

(சி/7825) -குடும்பத்தினர்

## 5-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

### லெப்டினன்ட் நந்தன்

கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன்

(காரை நகர் பிரதேசப் பொறுப்பாளர்)

என்றும் உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

குறிப்பு:- தேநீர் விருந்து உபசாரத்திற்கு 4 மணிக்கு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

என்றும் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

ஆலடி, இல. 523, கமால்வீதி,
காரைநகர். (6463) ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### தி. சி. கனேசலிங்கம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு அக்லண்ட் இன்சூரன்ஸ் பிரதிப் பொது முகாமையாளரும் (நிதி), கொழுபபுத் தமிழ்ச் சங்கப் பிரமுகரும், கொழும்பு சாயி சமித்திப் பொருளாளருமான தி. சி. கணேசலிங்கம் அவர்கள் 28-10 93 இல் காலமானார். இவர் யோகராணியின் அன்புக் கணவரும், துவாரகனின் (யாழ் இந்து உயர்தர மாணவன்) அருமைத் தந்தையும் இணுவில் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம், முத்துலிங்கம், கந்தசாமி, சிவகாமசுந்தரி, பூமலர், இரா



## செல்வி கஸ்தூரி குகதாஸ்

பளையைச் சேர்ந்த குகதாஸ்—லதா தம்பதிகளின் செல்வப் புதல்வி கஸ்தூரி தனது முதலாவது பிறந்த நாளை 03-11-1993 (நாளை) தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, தாத்தா, அம்மம்மா நோர்வேயில் வசிக்கும் அத்தை, மாமா, மச்சான், மச்சாள், லண்டனில் வசிக்கும் ஆசைச் சித்தப்பா, குட்டிச் சித்தப்பா, பெரிய மாமா, குட்டி மாமா, சித்தி, மாமாமார் மற்றும் உறவினர் நண்பர்கள் ஆகியோர் அம்பாள் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

குகன் ஸ்ரோர்ஸ், பளை. (6432) புலோப்பளை, பளை.

## நாலாண்டு நினைவு



அன்பின் அன்னை

### திருமதி நாகேஸ்வரி விஜயசிங்கம்

தோற்றம்: 15 6-1940 மறைவு: 15-11-1989

ஈரிரண்டு ஆண்டுகளாய் எம்மாதா வைப்பிரிந்து
காரிருளில் மூழ்கிக் கலங்குகின்றோம் — பாரினிலே
நெஞ்சார்ந்த நினைவுகளை நீர்விழியா லேகரைத்து
பஞ்சாகிப் போனோமம்மா.

என்றும் உங்கள் நினைவாக இருந்து
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

166/3 நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், குடும்பத்தினர்

(6456)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



கப்டன் ஜாதவன்



கப்டன் அருண்

வீரச்சாவடைந்த கப்டன் ஜாதவன் (சுப்பிரமணியம் இரத்தினகுமார், குச்சவெளி திருமலை, தற்போதைய முகவரி, புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம்) கப்டன் அருண் (சீனித்தம்பி அருமைத்துரை நிந்தாவூர் 6ஆம் வட்டாரம் அம்பாறை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

...ளார்.

யாழ்ப்பாணம் வேலணைக் கோட்ட தேர்வாளருக்கு நாளை புதன்கிழமை மு. ப. 9.00 மணிக்கும், யா/யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்திலும், மருதனார் ...லும், தென்மராட்சிக் கல்விக் கோட்டத் தேர்வாளர்களுக்கு நாளை மறுதினம் வியாழக் கிழமை பி. ப. 2.00 மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

## எழுதுவினைஞர் சேவை
### பதிவு செய்து கொள்ளவும்

(நமதுநிருபர்)

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் மத்திய அரசிற்கு விண்ணப்பித்து பரீட்சையில் தேர்ச்சிபெற்று முன்னர் அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

1992இல் நடைபெற்ற பரீட்சையில் கிடைத்த பெறுபேறுகளின்படி இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை முன்னர் கொழும்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ்வாறு அழைக்கப்பட்ட அனைவரையும் நாளை 3ஆம் திகதி அல்லது அதற்கு முன் சமுகம் கொடுத்து தத்தமது பெயர் விபரங்களை செயலக தாபனக் கிளையில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

6ஆம், 7ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டபடி தகைமைச் சான்றிதழ்களையும் அவற்றின் படபிரதிகளையும் மற்றும் ஆவணங்களையும் கொண்டுவருமாறும் அரச அதிபர் பணித்துள்ளார். [ச]

## பூப்பந்து
### சுற்றுப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழாத் தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கான பூப்பந்துச் சுற்றுப் போட்டி இன்று காலை 8 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கில் நடைபெறும்.

## கருத்தரங்கு

உதவி ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்காக நீர்கொழும்புக்கும் வவுனியாவுக்கும் தெரிவானோரின் கூட்டமொன்று நாளை புதன்கிழமை மாலை 2 30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெறும். நேறறைய கூட்டத்திற்கு சமுகம் தந்தவர்களும், தராதவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்


## உடன் அறிவிக்கவும்

கரும்பலகை அவசியம் தேவைப்படும் யாழ் - நல்லூர் கோட்ட அதிபர்கள் தங்கள் தேவைகளை யாழ்கோட்ட அலுவலகத்தில் உடன் அறிவிக்குமாறு பிரதி க்கல்விப் பணிப்பாளர் கோருகின்றார்.

### உதைபந்தாட்ட
## போட்டி

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய போட்டிகளாக சத்தியா அணியை எதிர்த்து கலைவாணி அணியும், சில்வஸ்ரர் அணியை எதிர்த்து காந்திஸ்ரார் அணியும் விளையாடவுள்ளன போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### பிலிஷியா நண்ஷி ஜெயபாபு

பிறப்பு 06-11-1989 இறப்பு 2-11-1992

அன்புச் செல்வமே! ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி எங்கு சென்றீர்! உம் பிரிவால் வாடும் அப்பா, அம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், அக்கா, தங்கா, மச்சாள்மார், அத்தான்மார், இருபாலை அம்மப்பா, அம்மம்மா, பூட்டி, சோமியா.

கற்கோவளம்,
பருத்தித்துறை. [5860]

என்றும் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

ஆலடி, காரைநகர். (6463) இல. 523, கமால்வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## தி. சி. கணேசலிங்கம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு அக்லண்ட் இன்சூரன்ஸ் பிரதிப் பொது முகாமையாளரும் (நிதி), கொழும்புத் தமிழ்ச் சங்கப் பிரமுகரும், கொழும்பு சாயி சமித்திப் பொருளாளருமான தி. சி. கணேசலிங்கம் அவர்கள் 28-10-93 இல் காலமானார். இவர் யோகராணியின் அன்புக் கணவரும், துவாரகனின் (யாழ் இந்து உயர்தர மாணவன்) அருமைத் தந்தையும் இணுவில் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம், முத்துலிங்கம், கந்தசாமி, சிவகாமசுந்தரி, பூமலர், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, செல்வநாயகி, சந்திரமணிதேவி, கெங்காதேவி, செல்லத்துரை, அம்பிகைபாகன், பத்மதாசன், திருநெல்வேலி ரட்ணராசா, வில்வராசா, ரட்ணராணி, வில்வராணி ஆகியோரின் மைத்துனரும், அருளம்பலம், பசுபதி, இராசலட்சுமி, கனகாம்பிகை ஆகியோரின் சகலனுமாவார். இறுதிக் கிரியைகள் 2-11-93 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
கணேசலிங்கம் துவாரகன் (மகன்)

''பிருந்தாவனம்''
கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு. (6452)

## திருமதி சபாரத்தினம் ஆச்சிமுத்துச் செல்வம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி சபாரத்தினம் ஆச்சிமுத்துச் செல்வம் சிவபதம் அடைந்துள்ளார். ஈமக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு இல்லத்தில் நடைபெறும். தகனக்கிரியைகள் நண்பகல் 12 மணிக்கு காரைக்கால் மயானத்தில் இடம்பெறும்.

தகவல்:
சபா. ஜெயராசா (மகன்)

கோவில்வாசல்,
இணுவில். 6

(6462)

## சோமசுந்தரம் சாந்தா

நல்லூர் புதிய செங்குந்தா வீதியில் வசிக்கும் சோமசுந்தரம் சாந்தா காலமாகிவிட்டார். இவர் நவரட்ணம் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் நகுலா, விஜயகுமார், விமலேஸ்வரி, ஜெயக்குமார், கிருஷ்ணகுமார், கமலேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை (2-11-93) இன்று காலை 10 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அருளானந்தம்
மைத்துனர்

(சி/7824)